அ.வ.எண்.96/2013 சகுந்தலா 06.02.2020

கு.வி.

3ம் பிரதிவாதி என் அண்ணன். தாவா சொத்துக்களின் சர்வே எண் எனக்கு தெரியாது. 5 முதல் 11 சொத்துக்களின் பெயர்களை தான் சொல்லி உள்ளேன். சர்வே எண்களை குறிப்பிடவில்லை என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி சொத்துக்களின் 4 எல்லைகளை கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். மேற்படி சொத்துக்களின் சர்வே எண் மற்றும் 4 எல்லைகள் தெரியும். 1 முதல் 4 சொத்துக்களை சுப்பிரமணி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். சுமார் 30 வருடங்களாக அந்த சொத்துக்களை அனுபவித்து வருகிறார். எனக்கு 1977ல் திருமணமானது என்றால் சரிதான். அந்த 1 முதல் 4வது அட்டவணை சொத்துக்களைப்பொறுத்து 2000ம் வருடத்தில் பங்கு கேட்டேன் என்றால் சரிதான். பங்கு கொடுக்கமுடியாது என்று சொல்லவில்லை கொடுப்பதாக சொன்னார். 10.07.2000ல் நான் வாதிக்கு எந்தவிதமான பத்திரமும் எழுதிக்கொடுக்கவில்லை. சொத்துக்களின் பட்டா என் அண்ணன் பெயரில் தான் உள்ளது. என் அண்ணன் தான் அந்த சொத்துக்களுக்கு கிஸ்து செலுத்துகிறார் என்றால் சரிதான். என் அப்பாவும் கட்டினார். என் அண்ணன் சில சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார். என் அண்ணன் மகன் 5ம் பிரதிவாதி சக்திவேல் சில சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார். என் தகப்பனார் இறந்து 12 வருடமாகிறது. யாரிடமும் நிலம் வாங்கினார் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களில் வருமானம் வருகிறது என்பதை காண்பிக்க ஆவணம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களிலிருந்து வருடம் வருமானம் 30 லட்சம் வரும். இந்த சொத்தில் வருடம் 30 லட்சம் வரும் என்பதற்கு ஆதாரம் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். 4ம் பிரதிவாதி என் அண்ணன் மனைவி. எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே என் அக்காள் ராஜம்மாளுக்கு திருமணமானது. திருமணத்தின்போது என் அப்பா உயிருடன் இருந்தார். தாவா சொத்துக்களில் எனக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. சாரதம்பாள் பெயரில் சொத்து வாங்கியுள்ளாரா என்றால் என் அப்பாவை மிரட்டி அவர் பெயரில் வாங்கிக்கொண்டார். 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்தை யார் எழுதிக்கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பா இறப்பதற்கு 5, 6 வருடத்திற்கு முன்பாக 4ம் பிரதிவாதி மேற்படி சொத்தை வாங்கினார். என் அப்பா சாரதம்பாளுக்கு சொத்தை எழுதிக்கொடுக்கவில்லை. 3, 4, 5 பிரதிவாதிகள் வாங்கிய சொத்துக்கு நான்கெல்லைகள், சர்வே நம்பர்கள் எனக்கு தெரியாது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/சகுந்தலா,
ஒம்/C.ஸ்ரீதர்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.